# நீங்கள் திடன் கொள்ளுங்கள் வேலையை நடத்துங்கள் நான் உங்களுடனே இருக்கிறேன். ஆகாய் 2 : 4

வெற்றி, வெற்றி, வெற்றி,
இயேசுவின் நாமத்தில் வெற்றி, ஊக்கமான ஜெபத்தால் வெற்றி.
வேதத்தை வாசிப்பதால் வெற்றி விசுவாச ஐக்கியத்தால் வெற்றி
தேவனுக்கு சாட்சி கூறு வெற்றி. சோதனை, வேதனை நெருங்கினாலும்,
சாத்தானின் சதிகள் பெருகினாலும் பின்னிடாதே, சோர்ந்திடாதே
இயேசுவையே பார்.

**வெற்றி . . . . . . . . . வெற்றி . . . . . . . . வெற்றி** அல்லேலூயா

புது மாத வாக்குத்தத்தம் என்ன ? என வாஞ்சையோடு வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

வெற்றி வேந்தன் இயேசுவின் நாமத்தில் உங்களை முதலாவது வாழ்த்துகிறேன். அத்துடன், **'வேலையை நடத்துங்கள்'** என அன்புடன் ஆவியானவரின் ஆலோசனையை கொடுக்கிறேன்.

**ஏனெனில் ஆகாய் 2:4 சொல்கிறது.**

**திடன் கொள்ளுங்கள்**

**வேலையை நடத்துங்கள்**

**நான் உங்களுடனே இருக்கிறேன்**

என்பதாக. ஆம், தேவன் நம்மோடிருக்கிறார். உங்களோடு இருக்கிறார்.

**நான் உங்களுடனே இருக்கிறேன்**

மேன்மையான ஒரு வாக்குத்தத்தம் **'நான் உங்களுடனே இருக்கிறேன்'**என்பதாகும்.

கலிலேயாவிலுள்ள மலையிலே 11 சீஷர்களும் கூடி இயேசுவை பணிந்து கொண்ட பொழுது, இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி, வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்குக உபதேசம் பண்ணுங்கள்.

இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் **சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட** இருக்கிறேன் என்றார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே சகலநாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றவர் எப்படிப்பட்டவர் தெரியுமா ?

**வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்** பெற்றவராக இருக்கிறார். அல்லேலூயா !

கடந்த நாட்களில் இந்த செய்தியை TVGM தலைமை அலுவலகத்தில் வைத்து எழுதிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது, **சகல அதிகாரமும்** எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இயேசு சொன்ன வார்த்தையை ஆழமாக இருதயத்தில் சொல்லிப் பார்த்தேன். இயேசுவின் அதிகாரத்தை என் உள்ளத்தில் உணர்ந்தபொழுது, ஆனந்த கண்ணீர் வடித்தேன். ஆம், அன்பரே, சகல அதிகாரமும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரம் பெற்ற இயேசு சொல்லுகிறார், உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்–என்பதாக. அல்லேலூயா.

**பக்தன் பாடுகிறார்**

**உலகத்தின் முடிவு வரைக்கும் நான்,**
**உன்னோடிருப்பேன் என்றாரே,**
**அல்பா ஒமெகா என்னும் நாமத் தோரிவர் – என்பதாக.**

**ஆதலால் நீங்கள் திடன் கொள்ளுங்கள்**
**வேலையை நடத்துங்கள் – ஆமென்.**
**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்.**
**அல்லேலூயா**